NOT FOR SALE

Registered as a Newspaper

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ: 1-25

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

சுடர் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ பங்குனி மீ 29 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 12 (12.04 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 11 6

★ யுத்த நிறுத்தத்துக்கு முன்பும் பின்பும்

குறிஞ்சாத்தீவில் குரும்பசிட்டியில் நேற்று மோதல்கள்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

நேற்று நண்பகல் 12-00 மணியுடன் அரசாங்கத்தின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருவதற்கு முன்பும் பின்பும் மோதல்கள் இடம் பெற்றன.

யுத்த நிறுத்தத்துக்கு முன்னர் குறிஞ்சாத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் குரும்பசிட்டியில் நடந்த மோதலில் சிப்பாய்கள் இழப்புடன் பின்வாங்கிச் சென்றனர்.

குரும்பசிட்டியில்

குரும்பசிட்டிப் பகுதியில் முகாமிட்டுள்ள சிப்பாய்கள் நேற்று யுத்த நிறுத்தத்தையும் மீறி தாரத் தாக்குதல்களை மேற்கொண்டபடி வெளியேற முயற்சித்தனர்.

ஸ்ரீ லங்கா அரசு யுத்த நிறுத்தத்தை பிரகடனப் படுத்தி ஒரு மணித்தியாலத்துக்குப் பின் இந்த மீறல் சம்பவம் நடைபெற்றது.

சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபடி மக்கள் வாழும் குடிசனப் பகுதிக்குள் நுழைய முயன்றனர்.

இவர்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய்கள் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர்,

விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

குறிஞ்சாத்தீவில்

ஆனையிறவு குறிஞ்சாத்தீவு பகுதியில் ஹெலிக்கொப்டரில் வந்த சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் சென்றி நிலைகளை தாக்கித் தரையிறங்க முயன்றனர்.

இவர்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

ஸ்ரீலங்கா அரசு யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்வதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன் இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவத்தில் மேலும் மூன்று பேர் காயமடைந்தனர்.

ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பகுதியில் சில வீடுகள் எரிந்து நாசமாகி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

சுமார் அரை மணி நேரமாக நடைபெற்ற இந்த மோதலில் ஹெலிக்கொப்டர் தரையிறங்காது பின்வாங்கிச் சென்றது

வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் விவரம் வருமாறு:-

1. கருணா (சிவராசா பவன்)
2. ரஞ்சித் (பாஸ்கரன் பவன்)

இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தோர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(இ-10)

வருடப்பிறப்பு கரும நேரம்

புதிய பிரபவ வருடம் எதிர்வரும் சித்திரை மாதம் முதலாம் திகதி (14-4-1987) செவ்வாய்க்கிழமை காலை மணி 6.32க்கு பூர்வ பக்ஷ பூரணைத் திதியில் பிறக்கின்றது.

முதல் நாள் இரவு மணி 2.09 முதல் அன்று முற்பகல் அதாவது செவ்வாய் பகல் 10 30மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

இவ்வேளையில் அனைவரும் மருத்துநீர் தேய்த்து சிவப்பு நிறப் பட்டாடை அணிந்து இஷ்ட தெய்வத்தை வழிபாடு செய்து முத்தோர் ஆசி பெறுவது சிறப்பாகும்.

கைவிசேஷம்

சித்திரை 2ஆம் திகதி (15-4-1987) புதன்கிழமை பகல் 9.50 முதல் நண்பகல் 12.00 மணி வரையுள்ள சுபவேளையில் கைவிசேஷம் பரிமாறிக் கொள்ளலாம்.

அல்லது சித்திரை 3 ஆம் திகதி (16-4-1987) வியாழக்கிழமை பகல் 9 40 முதல் நண்பகல் 12 00 மணிவரை கைவிசேஷம் பரிமாறலாம்.

கைவிசேஷம் மாறிக் கொள்ளும் சுபநேரத்தில் நாள் வேலை தொடங்குவது சிறப்பானதாகும்.

சுபநேரம்

12-04-1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9-06 முதல் 10-36வரை
ராகுகாலம்:
4-36 முதல் 6-06 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பங்குனி உத்தரம்

ஹெலியிடமிருந்து தப்பிய தொழிலாளி

அச்சுவேலி, ஏப். 12

மரம் வெட்டும் தொழிலாளி ஒருவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

நேற்று நண்பகல் ஆவரங்கால் கிழக்கு பன்னுரை வெளியில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வீட்டுக் கூரைக்கு மரம் வெட்டும் தொழிலாளி ஒருவர் கோடரி, வாள் மற்றும் பொருள்களுடன் சென்றுகொண்டிருந்தார்.

பன்னுரை வெளியில் இவரை ஹெலி ஒன்று அவதானித்து விட்டு தாழப் பறந்து தாக்க முற்பட்டது.

ஹெலி தன்னை நோக்கி தாழப் பறந்து வருவதை அவதானித்த தொழிலாளி மரம் வெட்டும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு கைகள் இரண்டையும் மேலே உயர்த்திக் காண்பித்தார்.

ஹெலியில் இருந்தவர்கள் நன்றாக அவதானித்துவிட்டு தொழிலாளியைத் தொடர்ந்து செல்லுமாறு கையால் சைகை காண்பித்தனர். ஹெலி ஆகாயத்தில் சிலநிமிட நேரம் வட்டமிட்டு விட்டு வந்த வழியே திரும்பிச் சென்றது

(இ-11)

மிச்சங்கி முரளி



உந்த எரிபொருள் விஷயம் மண்டையைக் கெல்லி எலியையும் பிடிக்க முடியாத விஷயமாய்த்தான் இருக்கும் போலை...!

★ விசாரணை எங்கே நடக்கும்?

கொழும்பு, ஏப். 12

யாழ் ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதல் சம்பந்தமான விசாரணையை எங்கு நடத்துவது என்பதை, தனிநபர் ஆணையாளர் திரு ஏ. வி. ஆலெஸ் தீர்மானிப்பார்

இப்படி பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரி மீதான தாக்குதல்:

சர்வதேசநீதி விசாரணை நடத்தப்படவேண்டும்

அத்துலத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

யாழ். ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதல் சம்பவம் குறித்த சர்வதேச நீதி விசாரணைக் குழு நியமித்து விசாரணை நடத்தவேண்டும்

இப்படி யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா தேசிய பாதுகாப்பு அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

"தனிநபர் ஆணைக்குழு வேண்டாம்"- என்ற தலைப்பில் அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் திரு சிவமகாராசா மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு பார்க்கும் போது யாழ் ஆஸ்பத்திரிமீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பந்தமாக தனிநபர் ஆணைக்குழு நியமிப்பதனால் எவ்வித பலாபலனும் கிடைக்காது.

தாக்குதல் யாழ். ஆஸ்பத்திரியோடு நின்றுவிடவில்லை. வல்வையில் அம்புலன்ஸ் கூட தாக்கப்பட்டுள்ளது.

இச்செயல் அநாகரிகமானதாகும். அம்புலன் (4 ஆம் பக்கம் பார்க்க)

மண்ணெண்ணெய் பெர்மிட்டை செயலகத்தில் வழங்க முடிவு

ஆனால் பெற்றோல், டீசல் பெர்மிட் தொடர்ந்து முகாமில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

மண்ணெண்ணெய் கொண்டு வருவதற்கான அனுமதிப்பத்திரம் (பெர்மிட்) இம் மாதம் 15ஆம் திகதி முதல் யாழ் அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். பலாலி முகாமுக்குச் செல்லத் தேவையில்லை.

ஆனால் பெற்றோல், டீசலுக்கான அனுமதிப் பத்திரம்பெற தொடர்ந்து இராணுவ முகாமுக்கே செல்லவேண்டும்.

பெற்றோல், டீசல் விநியோகத்துக்கு காங்கேசன்துறை எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு மேலதிகமாக யாழ் நகரிலும் ஒரு விற்பனை நிலையத்தை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்திற்கு எரிபொருள் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள், சிக்கல்களை யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் கடந்த 8ஆம் திகதி கொழும்பு பாதுகாப்பு அமைச்சில் நடந்த கூட்டத்தில் எடுத்து விளக்கினார்.

அதைத் தொடர்ந்தே மேற்கண்ட மாற்றங்களைச் செய்வது என்று மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் முடிவுகள் வருமாறு:-

(1) ஒவ்வொரு வாகனத்துக்கும் கொடுக்கப்படும் மண்ணெண்ணெய் 6,600 லீற்றராக இருப்பினும், கொண்டுவரும் வாகனங்களின் எண்ணிக்கை ஒரு வாரத்துக்கு 15இல் இருந்து 25ஆகக் கூட்டப்படும்.

நாளொன்றுக்கு கொடுக்கப்படும் மண்ணெண்ணெய் வாகனங்கள் முன்பிருந்ததைவிட ஐந்தாக அதிகரிக்கப்படும். பவுசர் வாகனங்களும் மண்ணெண்ணெய் கொண்டுவரப் பாவிக்கப்படலாம்.

(2) மண்ணெண்ணெய் கொண்டுவரச் செல்லும் வாகனங்களின் போக்குவரத்து நேரம் குறைக்கப்படும்,

(3) வட பிராந்திய போக்குவரத்துச்சபை அதன் வாகனங்களுக்கு வேண்டிய டீசல் எண்ணெயைக் கொண்டு வருவதற்குரிய அனுமதிப்பத்திரத்தை ஆனையிறவு முகாமில் இருந்து உடனடியாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-எ)

மெரீனா கடற்கரையில் தொடர் உண்ணாவிரதம்

சென்னை, ஏப் 11

நூற்றுக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் சென்னை மெரீனா கடற்கரையில் தொடர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள்.

வெள்ளிக்கிழமை இந்த உண்ணாவிரதம் ஆரம்பமானது.

இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து வருவதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த உண்ணாவிரதம் நடைபெறுகிறது

இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுவதை உலக நாடுகளின் சகல மனித உரிமைகள் ஸ்தாபனங்களுக்கும் தெரியப்படுத்துவதே இந்த உண்ணாவிரதத்தின் நோக்கம்.

இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

(இ-ஒ)

நீர்வேலி- கோப்பாய் மக்கள் பங்குபற்றிய கண்டன ஊர்வலம்

நீர்வேலி, ஏப்.12

நீர்வேலி, கோப்பாய் மக்கள், கண்டன ஊர்வலம் ஒன்றை வெள்ளிக்கிழமை நடத்தினர்,

இலங்கை அரசின் கூலிப்படைகள் வடபகுதியில் நடத்தி வரும் அசுரத்தனமான விமானத் தாக்குதலால் பாடசாலைகள், கைத்தொழில் நிறுவனங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், வீடுகள் அழிக்கப்படுவதைக் கண்டித்து ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலம் முடிவில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

(இ-110)

எரிபொருள் தகவல் தொடர்பு தடைகளை அகற்றுக

கூட்டணி கோரிக்கை

சென்னை, ஏப்.12

எரிபொருள், தகவல் தொடர்பு தடைகளை உடனடியாக அகற்றுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி முன்கண்டவாறு இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கூட்டணியின் அரசியல் குழு நேற்று சென்னையில் கூடி, இலங்கை அரசின் பத்து நாள் யுத்த நிறுத்த அறிவித்தல் பற்றி ஆராய்ந்தது.

அதன் பின்னர் விடுத்த அறிக்கையில்தான் இலங்கை அரசுக்கு முன்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இலங்கை அமைச்சரவை தனது மார்ச் 11 ஆம் திகதிக் கூட்ட முடிவில் எரிபொருள் தடையை அகற்றுவது என்று தீர்மானம் எடுத்தது.

அதன் பின்னர் ஒன்றுமே இடம்பெறவில்லை

இப்போது அமைச்சர் அத்துலத் முதலி விடுத்த அறிவிப்பில் பத்துநாள் யுத்த நிறுத்தம் சரியாக அமுல் நடத்தப்பட்டால் எரிபொருள், தகவல் தொடர்புத் தடைகள் அகற்றப்படும் என்று (4 ஆம் பக்கம் பார்க்க)

புதுச்சேரியில் ஹர்த்தால்

பாண்டிச்சேரி, ஏப்ரல் 12

புதுச்சேரி மாநிலத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐந்து தி. மு. க. எம். எல். ஏக்களை புதுச்சேரி சட்டசபை இடைநிறுத்தம் செய்ததை ஆட்சேபித்தே எதிர்க்கட்சிகள் ஹர்த்தாலை நடத்தின.

இதனால் மாநிலத்தில் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

படைகள் வெளியே வந்தால் தாக்குதல்

புலிகள் பிரமுகர் அறிவிப்பு

சென்னை, ஏப் 11

இலங்கை அரசப்படைகள் முகாமில் இருந்து வெளியேறி அழிவு வேலைகளில் ஈடுபட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்துவர்.

இவ்வாறு [illegible] தமிழ்ப் புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் சென்னையில் தெரிவித்தார்.

இலங்கை அரசின் பத்து நாள் யுத்த நிறுத்தம் ஒருதலைப்பட்சமானது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-எ)

கோட்டையிலிருந்து ஷெல்லடி, துப்பாக்கிச் சூடு!

சின்னக்கடையடியில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப் 11

யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை துப்பாக்கிப் பிரயோகங்களும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக இருவர் காயம் அடைந்தனர்.

ஷெல் தாக்குதலினால் சில கட்டடங்கள் சேதமடைந்தன.

யாழ்ப்பாணம் சின்னக்கடையடியில் காலை 6.30 மணிக்கு செய்தி கேட்டுக் கொண்டிருந்தவர்களில் இருவரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

எஸ். மத்தியூஸ் குருநகர், தருமன் பிறேமன் குருநகர் ஆகியோரே இந்த இருவரும். (இ-10)

✶ கைவிடப்பட்ட வீடுகளில் கைவரிசை!

டலாவி, ஏப். 12

அச்சம் காரணமாகக் குடியிருப்பாளர்கள் வெளியேறிய வீடுகளில் இருந்த பல பொருள்கள் திருடப்படுகின்றனவாம்.

மின்வயர்கள், வீட்டின் உள்ளே பொருத்தப்பட்டிருக்கும் மின்சாரப் பொருள்கள், நீரிறைக்கும் மோட்டர்கள் ஆகியவற்றுடன் கதவு, யன்னல்கூடக் களவாடப்படுகின்றனவாம்.

கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான், வயாவிளான் பகுதிகளில் அண்மைய இராணுவ முகாம் விஸ்தரிப்பினால் இடம்பெயர்ந்தவர்களது வீடுகளிலேயே இக்களவுகள் நடைபெறுகின்றன.

குண்டு வெடிப்பு?

வல்வெட்டித்துறை ஏப். 12

பருத்தித்துறை இராணுவ முகாமில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததாகக் கூறப்படுகிறது.

குண்டு வெடிப்பை அடுத்து அப்பகுதியில் பெரும் புகைமண்டலம் காணப்பட்டது

(இ-160)

வீடுகள் தகர்ப்பு

பருத்தித்துறை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள கப்பல்மடத்தடியில் உள்ள வீடுகள் நேற்றுக்காலை இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இதன் காரணமாக அப்பகுதி ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது. (இ-160)

இன்று மங்களகரமான
புதுக்கடைத்
திறப்பு விழா
ஆதவன் றேடிங் கொம்பனி
Athavan Trading Company

நிகழும் அக்ஷய வருஷம் பங்குனி உத்தரம் 29ஆம் நாள் (12-4-1987) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-06 — 10-36 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்—

மேற்குறிப்பிட்ட மொத்த, சில்லறை வியாபார நிலையத்தைத் திறந்து வைக்க நிச்சயித்துள்ளோம்.

அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

11/5, (87) ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
ஆதவன் றேடிங் கொம்பனி

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ இன்னும் சிறு விளம்பரங்கள் ★

விற்பனைக்கு

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், நிலம் மினுக்கும் இயந்திரம், டினர் செற், வெளிநாட்டு இசைவ வகைகள், வீட்டுப்படங்கள், மற்றும் வீட்டுத் தளபாடங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் ரி பி ஜே. துரைசிங்கம், 28, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

வெளிநாடுகளில் உள்ள தொண்டர் ஸ்தாபனங்கள்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கைத் தமிழருக்கு உதவ விருப்பம்

வாஷிங்டன், ஏப் 11

இலங்கைத் தமிழருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக நிவாரண உதவிகளை வழங்க வெளிநாடுகளில் உள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகவே நிவாரண உதவிகளை வழங்க இத்தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

ஆனால் இலங்கை அரசு செஞ்சிலுவைச் சங்கக் குழுவுக்கு அனுமதி மறுத்துள்ளதால் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் நிவாரண உதவிகளைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலைத் தமிழ் இனப்படுகொலையைத் தடுக்கும் அமெரிக்கக் கமிட்டிப் பிரமுகரான டாக்டர் இளங்கோவன் தெரிவித்தார்.

இனப்படுகொலையைத் தடுக்கும் அமெரிக்கக் கமிட்டியில் இலங்கை, இந்தியப் பிரமுகர்களுடன் மனித உரிமை இயக்கத்தவர்களான அமெரிக்கப் பேராசிரியர் ஜோர்ஜ் ஹாரட், திருமதி வா ஜினியா மிச்சனர் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

சிக்காகோவைத் தலைமையலுவலகமாகக் கொண்டு இந்தக் குழு இயங்குகின்றது (உ-எ)

பொதுமக்கள் பாதுகாப்புச் சபை:

ஆஸ்பத்திரி மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 12

கடந்த மாதம் யாழ் ஆஸ்பத்திரி மீது நடைபெற்ற மனிதாபிமான மற்ற, காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டிக்கும் தீர்மானத்தை திருநெல்வேலி பொதுமக்கள் பாதுகாப்புச்சபை நிறைவேற்றியுள்ளது.

சைவப் பெருமக்களின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவைக் கந்தன் ஆலயம் மீதும் குருக்கள் மீதும் மனிதாபிமான மற்ற முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மத சுதந்திரமும் மனித உரிமைகளும் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட இந்த குரூரச் செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

இத்தகைய மிலேச்சத்தனமான இராணுவத் தாக்குதல்களை நிறுத்தி மனிதத்தன்மையையும் சகோதரத் துவத்தையும் அரசு பேணிப்பாதுகாக்க வேண்டும்.

இப்படித் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

சகாய விற்பனை

13-4-87இல் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலும் 14-4-87இல் மருதடி விநாயகர் கோவிலிலும் மில்க்வைற் வாகனத்தில் சகாய விற்பனை நடைபெறும்.

மில்க்வைற் தயாரிப்புகளை ரூபா 15/-க்கு வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், கார்த்திக் கலண்டரும், ஸ்ரிக்கரும், கீரைவிதைப் பைக்கற்றும், சவுக்கு, அகத்திக் கன்றுகள் மில்க்வைற் வெளியீடுகளும் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அதைக் கொடுத்து பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

சுன்னாகம் பிரசைகள்குழு நன்றி

சுன்னாகம், ஏப். 12

சுன்னாகம் பிரசைகள் குழுவின் கோரிக்கைக்கிணங்க செவ்வாய்க்கிழமை சுன்னாகத்தில் சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் - தனியார் தொழிற்சாலைகளையும் முழுமையாக மூடி ஹர்த்தால் பூரண வெற்றியடைய ஒத்துழைத்த சகலருக்கும் சுன்னாகம் பிரஜைகள் குழு நன்றி தெரிவிக்கின்றது

(இ-27)

கரம்பனில் நாடகக் களப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப் 12

காவலூர் இலக்கிய வட்டத்தினரின் ஆதரவில் கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாடகக் களப்பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன

இம்மாத முடிவில் மூன்று நாள் நாடகப் பட்டறை ஒன்றை நடத்தவும் இலக்கிய வட்டத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். (இ-எ)

பதுங்கு குழிகளும் பனை தறிப்பும்

அச்சுவேலி ஏப் 12

பதுங்கு குழிகள் அமைப்பதற்கு தென்னை, பனை மரக்குற்றிகள் பயன்படுத்தப்படுவதால் பயனற்ற மரங்கள் தறிக்கப்படுகின்றன. மண்மூடை அடுக்குவதற்கு பயன்படுத்தப்படும் சாக்கு, உரப்பை என்பனவற்றுக்கு விலை அதிகரித்திருப்பதுடன் இவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது (இ-11)

கிளிநொச்சியில்

கைதான சகோதரர் இருவரும் விடுதலை

கிளிநொச்சி, ஏப் 12

பல்கலைக் கழக மாணவனும் அவனது சகோதரரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது :-

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தாமோதரம்பிள்ளை தவஞானபண்டிதன் என்பவர் கிளிநொச்சி நாலாம் வாய்க்காலில் வைத்து கிளிநொச்சி இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

இதன்பின் இவரது இளைய சகோதரன் தாமோதரம்பிள்ளை விஞ்ஞானபண்டிதன் விளையாட்டுப் போட்டிக்குச் சென்றுவிட்டு டிராக்டரில் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் கிளிநொச்சி பிரதான வீதியில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

இவர் பல்கலைக் கழக மாணவன்

இவர்கள் இருவரும் கிளிநொச்சி பிரசைகள் குழுவின் முயற்சியால் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர் (இ76)

வடக்கு- கிழக்கு தமிழரின் தாயகமாம்:

பிரபாகரனின் கோரிக்கையை ஏற்க முடியுமா? சிறிமா கேட்கிறார்

கொழும்பு ஏப்,12

வடக்கு, கிழக்கு பகுதிகளை தமிழரின் தாயகமாக அங்கீகரிக்கும்படி பிரபாகரன் கேட்கிறார். இதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்?

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

பொரலஸ்கமுவ என்னும் இடத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா இப்படிக் கேட்டார்

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு கிழக்குப் பகுதிகளை தாயகமாக ஏற்காத தீர்வு எதையும் திரு. பிரபாகரன் ஏற்கப்போவது இல்லை.

வடக்கு, கிழக்கு மட்டுமல்ல, நாட்டின் அனைத்துப் பகுதிகளும் அனைவருக்கும் சொந்தமே

இன்று வடக்கு மக்கள் துயரத்துடனும் பீதியுடனும் வாழ்கிறார்கள். அவர்கள் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கவில்லை.

பொதுத் தேர்தல் ஒன்றின் மூலமே இக்குறையை நீக்க முடியும்.

—இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

(உ-ஐ-எ)

பழைய மாணவர் சங்க ஆண்டு பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஏப் 12

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆண்டு பொதுக் கூட்டம் நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில் பல வருடங்களாக சேவையாற்றி இளைப்பாறிய ஆசிரியர்கள் திரு. சே. இராசராசா, திருமதி ம. துரைராசா ஆகியோருக்கு பிரிவுபசார விழாவும் இடம்பெறும்

ஆலயபூசை உள்ளக விளையாட்டுக்களும் இடம்பெற உள்ளன

(இ-எ)

மக்கள் முகம்

ஏழாலை முத்தமிழ் மன்றம்

சுன்னாகம், ஏப். 12

ஏழாலை முத்தமிழ் மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகசபை தெரிவு தலைவர் நா. இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர்: திரு. நா. இலட்சுமிகாந்தன்; உப தலைவர்கள்: திரு. ஸ. பத்மநாதன், செல்வி பா. வனஜா செயலாளர்: திரு க. மகாதேவன் உப செயலாளர்: திரு ச. கிருஷ்ணமூர்த்தி நிர்வாக செயலாளர்: செல்வி பொ. தவமலர் கலைச் செயலாளர்கள்: திரு. இ. இராசேஸ்வரன் செல்வி. சி. பவானி விளையாட்டுச் செயலாளர்: திரு. சி. தேவகுமார் சனசமூக நிலைய செயலாளர்: திரு. சி. வரதகுமார் பொருளாளர்: திரு. பி. விமலேஸ்வரன்.

திருவாளர்கள் இ. சுரேந்திரன், கு. சுரேந்திரன் சி ஸ்ரீபாலன், சு புவனேஸ்வரன், இ வரதராசன் ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

[illegible] களாக திரு. பொ. [illegible] செல்வி [illegible] தெரிவாகினர்.

குரும்பசிட்டி முத்துமாரி அம்மன்

ஆலயம்சென்றுவழிபட ஒழுங்கு செய்து தருக

அரசு அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

புத்தாண்டு தினத்தன்று குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வழிபட ஒழுங்கு செய்து தாருங்கள்.

குரும்பசிட்டி மக்கள் நலன் புரிச் சபை யாழ் அரச அதிபரை முன்கண்டவாறு கேட்டுள்ளது.

புத்தாண்டு தினத்தன்று குரும்பசிட்டி அம்மன் ஆலயத்துக்கு மக்கள் சென்று விசேட பூசை வழிபாடுகள் நடத்துவது வழக்கம்.

குரும்பசிட்டி மக்கள் ஆலய பிரதம குருவிடம் இருந்தே கைவிசேஷமும் பெற்று வந்தனர்.

துர்திருஷ்டவசமாக இந்தப் பாரம்பரிய நடைமுறைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்குக் குரும்பசிட்டி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆலயத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் ஆயுத படையினர் நடமாடுவதே இதற்குக் காரணமாகும்.

ஆகவே உரியவர்களுடன் தொடர்பு கொண்டு ஆலயச் சுற்றுடலில் இருந்து ஆயுதப் படையினரை விலக்கி, மக்கள் பாரம் பரிய நடைமுறைகளை மேற்கொள்ள உதவுங்கள்.

இப்படி யாழ். அரச அதிபருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் குரும்பசிட்டி மக்கள் நலன்புரிச்சபை கோரிக்கை விடுத்து உள்ளது. (இ-எ)

பனம் தும்பு உற்பத்திக்கு ஊக்கம்

பலாலி, ஏப். 12

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பனம் தும்புக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதாலும், ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான தொன் பனம் தும்புக்கு கேள்விகள் வந்துள்ளதாலும் பனம் தும்பு உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தை பனை அபிவிருத்திச்சபை மேற்கொண்டு வருகின்றது.

வீட்டில் இருந்தவாறே ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து தமது அன்றாட சீவனத்துக்கு உதவக் கூடியதாக ஒருகிலோ பனம் தும்பை பனை அபிவிருத்திச் சபை 12 ரூபா தொடக்கம் 15 ரூபாவரை உடன்பணம் கொடுத்துக் கொள்வனவு செய்யும் முறையை நடைமுறைப்படுத்தி வருகிறது.

தனிநபரோ, அன்றி ஸ்தாபன ரீதியாகவோ இதில் ஈடுபடக் கூடிய ஆண், பெண் இருபாலாரையும் தெரிவு செய்து சபைக்கு அறிவித்தால் அவர்களுக்கு பனம் தும்பு உற்பத்திக்கான இலவசப் பயிற்சி வழங்கப்படும் என்று சபையின் தலைவர். திரு. க. நடராசா அறிவித்துள்ளார்.

பனம் மட்டையின் [illegible] மூலப் பொருளாகக் கொண்டிருக்கும் இந்த [illegible]லில் ஈடுபடும் ஒருவர் நாளொன்றுக்கு மிக இலகுவாக 30 ரூபாவிலிருந்து 50 ரூபாவரை வருமானம் பெற முடியும் (இ-119)

விளையாட்டரங்கு

ஷப்ரு வெற்றிக் கேடய

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

புங்குடுதீவில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஏப். 12

ஷப்ரு வெற்றிக் கேடயத்திற்காக ஷப்ரு நிறுவனத்தின் ஆதரவுடன் தீவுப்பகுதி உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடைபெறும்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த 18 விளையாட்டுக்கழக அணிகள் பங்கு கொள்ளும் இந்த 'நொக் அவுட்' முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

13 ஆம் திகதி காலை 8-00 மணிக்கும் 14 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கும் போட்டிகள் ஆரம்பமாகும்.

இந்த போட்டிக்கான ஒழுங்குகள் யாவற்றையும் கே. பீலிக்ஸ் செய்து வருகிறார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் முதல் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை ஷப்ரு நிதி நிறுவனம் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

(இ-167-7)

பாடசாலைகளுக்கிடையிலான

உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

நாகர்கோயில் கொத்தணி

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை. மணற்காடு றோ.க. தமிழ்க்கலவன் பாடசாலை

இவை இரண்டும் 13 வயதுப் பிரிவில் ஆண் – இருபிரிவிலும் முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றன.

புலோலி கொத்தணி

ஆண்கள் 13 வயதுப் பிரிவு:-

புற்றளை மகாவித்தியாலயம் முதலாமிடம், மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம் இரண்டாம் இடம், புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மூன்றாமிடம்.

17 வயதுப்பிரிவு;-

வேலாயுதம் மகாவித்தியாலயம் முதலாமிடம்,

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

புலோலி அமெரிக்க மிஷன் பாடசாலை முதலாமிடம், மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாமிடம்.

17 வயதுப் பிரிவு:-

வடஇந்து மகளிர் கல்லூரி முதலாமிடம், புற்றளை மகாவித்தியாலயம் இரண்டாமிடம்.

புங்குடுதீவு கொத்தணி

ஆண்கள் 13 வயதுப் பிரிவு;-

ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் முதலாமிடம், புங்குடுதீவு மகாவித்தியாலயம் இரண்டாமிடம், புங்குடுதீவு றோ. க. த. பாடசாலை மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு:-

ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் முதலாமிடம், புங்குடுதீவு மகாவித்தியாலயம் இரண்டாமிடம், சித்திவிநாயகர் மகாவித்தியாலயம் மூன்றாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

ஸ்ரீகணேச மகாவித்தியாலயம் முதலாமிடம், ஸ்ரீ சுப்பிரமணி மகளிர் மகாவித்தியாலயம் இரண்டாமிடம், புங்குடுதீவு றோ. க. த. பாடசாலை மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு:-

ஸ்ரீசுப்பிரமணிய மகாவித்தியாலயம் முதலாமிடம், புங்குடுதீவு மகாவித்தியாலயம் இரண்டாமிடம், புங்குடுதீவு றோ. க. த. பாடசாலை மூன்றாமிடம்.

19 வயதுப் பிரிவு:-

ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் மகாவித்தியாலயம் முதலாமிடம்.

(தொடரும்)

(இ-7)

பிரியாவிடை

சாவகச்சேரி ஏப் 12

மட்டுவில் தெற்கு அ. மி. த. க. வித்தியாலய ஆசிரியை திருமதி நா. வரதலிங்கம் நுணாவில் மேற்கு கணேசா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை ஒட்டி மேற்படி வித்தியாலயத்தில் பிரிவுபசார விருந்தளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

உரும்பராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப்

பொதுக் கூட்டம்

18-04-87 சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகல பழைய மாணவருக்கும் அறியத் தருகின்றோம். புதுவருட விடுமுறைக்கு வர இருக்கும் பழைய மாணவர்களையும் அழைத்து வருமாறு சக பழைய மாணவரை அன்புடன் வேண்டுகின்றோம். வருட உறுப்புரிமைப் பணம் 5 ரூபாவையும் கொண்டு வந்து செலுத்துமாறும் தாழ்மையுடன் விண்ணப்பிக்கின்றோம். நாட்டு நிலைமை சீரில்லாதபடியால் தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

★ நிகழ்ச்சி நிரல் ★

1. தேவாரம்
2. தலைவர் (அதிபர்) உரை
3. நிர்வாகசபை உத்தியோகத்தர் தெரிவு
4. தேனீர் விருந்து
5. தேவாரம்

திரு. S. சிவானந்தன்
தலைவர் / அதிபர்
உரும்பராய் இந்துக் கல்லூரி.

S K மனோகரபவன்
செயலாளர்
S ராஜானந்தன்
இணைச் செயலாளர்

(2830)

★ ஜெனட்டென்ஸ் ★

உயர்ரக உருக்கு (Steel) தளபாட
உற்பத்தியின் முன்னோடிகள்!

புதிய அமைப்பில் உறுதியும்
உத்தரவாதமும் கொண்ட

வீட்டு, காரியாலய (Office)
தளபாடங்கட்கு நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

ஜெனட்டென்ஸ்

K. K. S. வீதி, இணுவில். (C)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
நமசிவாயம்
விமலா
★

பிறப்பு:
16 : 3 - 1966

இறப்பு:
3 - 4 - 1985

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு
தாய்,
தந்தை,
சகோதர
சகோதரிகள்
உற்றார்,
உறவினர்,
நண்பர்கள்

உதயகிரி,
அடம்பன்



(1194)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

நாட்கள் பொல்லாதவை எனவே தான் காலத்தைப் பிரயோசனப் படுத்திக் கொள்ளுங்கள்.

— பைபிள்

உதயன்

இல. 15, [illegible] தொலைபேசி: 24805
23078
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் 12-04-1987 த.பெ.இல. 84

உலகத்தை ஏமாற்ற அர்த்தமற்ற யுத்த நிறுத்தம்!

ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தம் இப்போது அமுலுக்கு வந்திருக்கிறது.

யுத்த நிறுத்தம் சம்பந்தமாக அரசாங்கத்தின் சார்பில் தேசிய பத்திரோபஸ்து மந்திரி தெரிவித்த விவரங்கள், வியாக்கியானங்கள் ஒரே குழப்பமும், மயக்கமும் தருவனவாக உள்ளன. அவை பெரும் கேலிக்குரியனவாகவும் இருப்பதையும் காணமுடிகிறது.

யுத்த நிறுத்தம் பத்து நாட்களுக்காம். அதுவும் தரைத்தாக்குதல்கள் மட்டுமே நிறுத்தப்படுமாம். கடல் மார்க்கத்தாக்குதல் நிறுத்தப்படமாட்டாது என்று விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வான் தாக்குதல் பற்றி எதுவும் வெளிப்படையாகப் பிரஸ்தாபிக்கப்படவில்லை. அதன் அர்த்தம் அவசியம் வரும்போது வான்தாக்குதல் நடக்கும் என்பதேயாம். 'ஷெல்' தாக்குதலும் வான் தாக்குதலுக்குள் அடங்கக்கூடும். ஷெல் முகாமிலிருந்து ஏவப்பட்டு வானத்தினூடாகவே வந்து விழுகிறது. அதனால் அதனை ஒரு வான் தாக்குதலாகவும் அரச வியாக்கியானம் சொல்லலாம்.

மொத்தத்தில் யுத்த நிறுத்தம் என்பது முகாமிலிருந்து அல்லது வீதியில் நின்று துப்பாக்கியால் சுடுவதை நிறுத்துவதை மட்டுமே குறிக்கிறது எனலாம்.

அதுவும் கூட, போராளிகள் தாக்கினால் அதனால் பதில் தாக்குதல் புரிந்தோம் என்று கூறி துப்பாக்கித்தாக்குதலையும் நடத்த இடமுண்டு.

இதுவா யுத்த நிறுத்தம்?

யுத்த நிறுத்தம் என்று சொன்ன அதே வாயால், போராளிகள் தாக்கினால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என்று தெரிவிக்கிறார் அமைச்சர் அத்துலத். பதில் தாக்குதலும் தாக்குதல் தான். தாக்குதலுக்கு இடமிருக்கும்போது அது எப்படி யுத்த நிறுத்தமாக முடியும்?

இதற்கிடையில், யுத்த நிறுத்த காலத்தில் போராளிகள் ஒத்துழைப்புத் தராவிடில் தமிழ்ப்பகுதிகளில் பெருமளவில் இராணுவ நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதும் அம்பலத்துக்கு வந்திருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ மந்திரி முகம்மது அந்த இரகசியத்தை, யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற முஸ்லிம் தூதுக்குழுவிடம் தெரிவித்திருக்கிறார்.

அப்படியாயின் ஒரு தலைப்பட்சமான அர்த்தமற்ற - பூரணத்துவம் இல்லாத - யுத்த நிறுத்தம் எதற்காக? பின்னே வரப்போகும் புயலுக்குக் கட்டியம் கூறும் சிறு அமைதியா இது? வடக்குக் கிழக்கில் உள்ள அரசபடையினருக்கு புத்தாண்டு லீவு வழங்குவதற்கான ஓர் ஏற்பாடாகவும் இது இருக்கலாம்.

போராளிகளை ஆயுதங்களைக் கீழே போடுமாறு அதிகாரத் தொனியிலும், நிபந்தனை விதிக்கும் குரலிலும் அரசு வெருட்டிப் பார்த்தது. அதன் ஜம்பம் பலிக்கவில்லை. அந்தத் தோல்வியை ஈடுசெய்ய இப்போது ஒரு தலைப்பட்சமான அர்த்தமற்ற யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கிறது அவ்வளவு தான். இது உலகத்தை ஏமாற்றும் வேலை. தமிழர்களை ஏமாற்ற முடியாது. போராளிகளையும் ஏமாற்ற முடியாது.

தமிழர்களின் கஷ்டங்களை நீக்க வேண்டும் என்று அரசாங்கம் உண்மையாகவே விரும்பி இருப்பின் 'அர்த்தமற்ற' யுத்த நிறுத்தத்தை அறிவித்த கையோடு தொலைபேசித் தடையையும் எரிபொருள் தடையையும் நீக்கி இருக்கலாம். அவற்றைச் செய்வதற்கும் போராளிகள் ஆயுதத்தைப் போட வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறார் அத்துலத். பாவம் அமைச்சர்!

அடுத்து மிக முக்கியமான ஒரு அம்சமும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டி உள்ளது.

அரசாங்கம் இதுவரை யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதில்லை. தீவிரவாத அல்லது பயங்கரவாத ஒழிப்பு என்று கூறியே இராணுவ நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

பிரகடனம் செய்யப்படாத யுத்தத்தைத் தவிர்ப்பதை எப்படி யுத்த நிறுத்தம் என்று சொல்லமுடியும்?

உண்மையான யுத்த நிறுத்தம் என்றால் படைகள் எங்கே நிலை கொண்டிருந்தனவோ அங்கிருந்து விலகுவதும் அதில் அடங்கும். எனவே ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தமோ, இருதரப்பு யுத்த நிறுத்தமோ அரச படைகள் வடக்குக் கிழக்கில் உள்ள முகாம்களில் இருந்து வாபஸாகி ஆக வேண்டும்.

அதுவே உண்மையான யுத்த நிறுத்தம். 1961 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடந்த சத்தியாக்கிரகத்தை அடக்குவதற்காக இங்கு முதன்முதலில் இராணுவ ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டது.

1961 ஏப்ரலுக்கு முன்னர் சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக் கடத்தல் என்பவற்றைத் தடுப்பதற்காக ஒரு சிறு படைப்பிரிவே (TAFFAI) வடக்கு, கிழக்கில் இயங்கியது. 1961 ஏப்ரலில் கேர்ணல் உடுகம யாழ்ப்பாணம் வந்ததோடு இராணுவம், கடற்படை, விமானப்படை என்று மெது மெதுவாக எல்லாம் கொண்டுவந்து குவிக்கப்பட்டன.

யுத்தநிறுத்தம் உண்மையானதாக இருப்பின் இராணுவ ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும். அதாவது 1961 ஏப்ரலுக்கு முன் இருந்த நிலை வடக்கு, கிழக்கில் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

சுனில் தத்தின்

சமாதான யாத்திரை பொற்கோயிலை அடையும்

சண்டிகார், ஏப். 11

நடிகர் சுனில்தத் தலைமையில் சமாதான யாத்திரிகர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை சீக்கியர்களின் புனித ஸ்தலமான பொற்கோயிலை அடைவார்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பம்பாயிலிருந்து ஆரம்பமான சமாதான யாத்திரை தற்பொழுது பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்று பொற்கோயிலைச் சென்று அடைவதுடன் பூர்த்தியாகும்.

இவர்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டமொன்றில் கொலை முயற்சி செய்யப்பட்டதெனினும் பொலீஸார் அதனை முறியடித்து மூன்று தீவிரவாதிகளை கைது செய்தனர்.

54 வயதுடைய சுனில் தத் தனது மனைவி நர்கீஸுடன் நடித்த மதர் இந்தியா என்ற ஹிந்திப் படம் மூலம் பிரபலமானவர்.

தற்பொழுது மனைவியை இழந்துவிட்ட சுனில்தத் தனது 18 வயதுடைய மகளுடன் இந்த ஊர்வலத்தை நடத்தி வருகின்றார்.

பொற்கோயிலுக்கு வெளியே சகல பாதுகாப்புகளையும் வழங்கப்போவதாக அறிவித்த பஞ்சாப் பொலிஸார் பொற்கோயிலுள் தீவிரவாதிகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி நடமாடுவதால் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று தெரிவித்தனர். (ஓ)

சுரங்கவிபத்து: 37 பேர் பலி

கேப்டவுன், ஏப்ரல் 11

தென் ஆபிரிக்காவில் உள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்துள்ளது.

இவர்கள் 110 மீட்டர் ஆழத்தில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது விபத்து ஏற்பட்டது (ஓ)

வளைகுடாப் போரை முடிக்க லிபியா விருப்பம்

திரிபோலி, ஏப். 9

ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான போர் நிறுத்தம் ஒன்றை சமரசமான வகையில் தீர்வு காண லிபியா முழு அளவிலான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது.

இவ்வாறு லிபியாத் தலைவர் கேர்ணல் கடாபி தெரிவித்தார்.

ஈரானும் ஈராக்கும் தங்கள் படை பலத்தையும் பண பலத்தையும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட்டப் பயன்படுத்த வேண்டும். வளைகுடா யுத்தத்தில் ஈடுபட்டு வரும் எந்த ஒரு நாட்டையும் லிபியா எதிர்க்கவில்லை. ஆறுவருடகாலமாக யுத்தத்தில் ஈடுபடுவது எந்தவொரு நாட்டிற்கும் எவ்வித பலனையும் தரப்போவதில்லை.

எனவே லிபியா உண்மையிலேயே நல்லெண்ணத்துடன் ஈரானும் ஈராக்கும் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய கேட்கிறது.

பிரான்சும் அமெரிக்காவும் வளைகுடா யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கி கொள்ளைலாபம் ஈட்டுகின்றன.

இவ்வாறு கடாபி மேலும் கண்டனம் தெரிவித்தார். (ஓ)

இரசாயன ஆயுத உற்பத்தி நிறுத்தம்

ரஷ்யா அறிவிப்பு

பிராக், ஏப் 11

சோவியத் யூனியன் இரசாயன ஆயுத உற்பத்தியை முற்றாக நிறுத்தியுள்ளது. இதன் மூலம் எதிர் காலத்தில் அணு ஆயுத உற்பத்தியும் கணிசமான அளவில் குறையும்.

ஐரோப்பாவில் அணு ஆயுதக் குறைப்பு நடவடிக்கையும் அவசிய மானதாகும்.

செக்கோஸ்லவாகியாவில் இரண்டாவது நாளாக தங்கியிருக்கும் கோர்ப்பச்சேவ் பிராக்கில் இதனை அறிவித்தார்.

ஐரோப்பிய கண்டத்தில் குறுகிய வீச்சு ஏவுகணைகளை அகற்றுவதற்கு அமெரிக்காவும் சோவியத்தும் உடனடியாகப் பேச்சு நடத்த வேண்டும் என அவர் புதிதாக தெரிவித்தார்.

இவற்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் நடுத்தர ஏவுகணைகள் குறித்த பேச்சுக்களுடன் இதனைத் தொடர்பு படுத்த வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை மாஸ்கோ செல்ல இருக்கும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்சுடன் இவ்விடயம் ஆராயப்படும். (ஓ)

இத்தாலியில் அரசமைக்கக் கோரிக்கை

ரோம், ஏப்ரல் 11

இத்தாலியின் கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சியை சேர்ந்த உள்நாட்டு அமைச்சர் ஆஸ்கர் ஸ்கல்பரோவை புதிய அரசாங்கம் அமைக்கும் படி கோரப்பட்டுள்ளார்.

இத்தாலியின் ஜனாதிபதி ஒஸிக்கா இவ்வாறு உள்துறை அமைச்சரைக் கேட்டார்.

இந்தக் கட்சி விலகியதால் சோசலிஷ்ட் பிரதமர் கிராக்ஸியின் ஐந்து கட்சிக் கூட்டணி அரசு அண்மையில் ராஜினாமாச் செய்தது (ஓ)

வெளி உலகில்

மொராக்கோவில் மோதலில் 120பேர் பலி

ரபாட், ஏப் 11

மொராக்கோவில் அரச துருப்புகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் ஏற்பட்ட கடும் மோதலில் சுமார் 120 பேர் வரை பலியானார்கள்.

மேற்கு சகாராவில் பொலிசேரியோ கிளர்ச்சியாளர்களை அரச துருப்புக்கள் தாக்கியதில் 84 பேர் மரணமானார்கள். 24 பொலிஸாரும் இதில் பலியானார்கள்.

கிளர்ச்சியாளர்கள் பாதுகாப்புக் கட்டடமொன்றைத் தாக்க முயன்றபோது பொலிஸார் தடுக்க முயன்றபோது மோதல்கள் ஏற்பட்டன.

கடந்த இரு மாதங்களாக இப்பகுதியில் கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. (ஓ)

சட்டசபையிலிருந்து தி. மு. க. வெளிநடப்பு

சென்னை, ஏப்.11

தமிழக சட்டசபையிலிருந்து திராவிடர் முன்னேற்றக்கழகமும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இன்று வெளிநடப்புச் செய்தன.

ஆனந்தவிகடன் ஆசிரியரைக் கைது செய்தது பற்றி விவாதிக்க அனுமதியை அவர்கள் கோரியிருந்தனர். அதனை சபாநாயகர் நிராகரித்த பொழுதே வெளிநடப்பு மேற்கொள்ளப்பட்டது.

சபாநாயகரின் நிராகரிப்பை எதிர்த்து எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பின. (ஓ)

றேகன் வரவேற்பு

வாஷிங்டன் ஏப். 11

சோவியத் யூனியனின் இரசாயன ஆயுத உற்பத்தி நிறுத்தத்தையும் சிறியரக ஏவுகணைகளை ஐரோப்பாவிலிருந்து முற்றாக ஒழிப்பது என்ற புது யோசனையையும் அமெரிக்க ஜனாதிபதி றேகன் வரவேற்றுள்ளதாக அறிவித்தார். (ஓ)

சீன குற்றச்சாட்டு

பீகிங், ஏப்ரல் 11

நமீபியாவின் சுதந்திரத்திற்கு எதிரான திட்டத்தை தென் ஆபிரிக்கா மீண்டும் தயாரிக்கின்றது.

இவ்வாறு சீன குற்றம் சாட்டியுள்ளது.

சட்டவிரோதமாக நமீபியாவை ஆக்கிரமித்துக்கொள்ள தென் ஆபிரிக்கா முயல்வதாக ஐ.நா விற்கான சீன தூதுவர் குறிப்பிட்டார். அயல்நாடுகளை தென்ஆபிரிக்கா தாக்குவது அவற்றிற்கு மட்டுமல்ல சர்வதேசங்களுக்குமே அச்சுறுத்தலாகும். (ஓ)

சூல்ட்ஸ் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப்.11

மாஸ்கோவில் அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பில் கவனக் குறைவு இருப்பதற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் முழுப் பொறுப்பேற்றுள்ளதாக அறிவித்தார்.

அடுத்த வாரம் மாஸ்கோ செல்லும் போது ரஷ்யத் தலைவர்களுடன் இது பற்றி ஆராயப்போவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ)

கல்வாரியை நோக்கி சிலுவைப் பயணம்

ரூபன் மரியாம்பிள்ளை

நிலை பதினொன்று- (சிலுவையில் அறையப்படுகிறார்)

இயேசுவின் மரண நேரம் குறிக்கப்படுகிறது. இறப்பை நெருங்கி விட்டேன் என்ற மரணப்பயம் அவரை ஆட்கொள்கிறது. என் அன்புக்குரியவர்களைப் பிரியப் போகிறேன். அவர்கள் என்னை மறந்து விடுவார்களா என்ற ஏக்க உணர்வு. கடமையை நிறைவேற்றி விட்டேனா? தொடர்ந்தும் என் பணி தொடரப்படுமா என்ற குழம்பிய மன நிலை.

நமக்கும் இப்படி ஒரு நேரம் கொடுக்கப்பட்டால் நம் மனநிலை எப்படி இருக்கும். காணியை நினைப்போம். சேர்த்த செல்வத்தை நினைப்போம். உறவுகளை நினைப்போம். இயேசு தன் பணியை நினைத்துக் கொண்டார். இறை சித்தம் நிறைவேறியதா என்பதைப் பற்றி நினைத்துக் கொண்டார். அந்த அனுபவங்களையும் இறை சித்தம் நிறைவேறதாக்கிக் கொள்வோம்.

நிலை பன்னிரண்டு- (இயேசு இறக்கிறார்)

மனிதனின் முடிவு இறப்பு என்பது இயற்கையின் நியதி ஊருக்கு வாழ்ந்தவர்கள் இறப்பதுமில்லை உலகம் அவர்களை மறப்பதும் இல்லை என்ற கூற்று எம் உலக அனுபவங்களில் எவ்வளவு நிஜமானது.

தனது அழிவில்தான் மனிதனது மீட்பு என்று தெரிந்த இயேசு தன்னை அழித்துக் கொள்கிறார்.

சரித்திரம் முதன் முதலாக இப்படி ஒரு நிகழ்வை பெற்றுக் கொள்கிறது சரித்திரம் மீள நடக்கும் என்று சொல்லுவார்கள் இந்த நிகழ்வு சரித்திரத்தில் மீள நடக்கப் போவதே இல்லை.

எமது பூமியில் எந்த இறப்பும் இதற்கு ஈடாகப் போவதும் இல்லை. இனி நாம் இறப்போம் எம் இறப்பில் இனி ஒரு புது உலகம் படைக்கப்படும்.

நிலை பதின்மூன்று- (இயேசு சிலுவையில் இருந்து இறக்கப்படுகிறார்)

அவமானத்தின் சின்னம் சிலுவை இயேசு ஏறி இறங்கிய பின் வெற்றியின் சின்னமாகிறது. அடிமைகளின் அவமானச் சின்னம் விடுதலையின் வீரச் சின்னமானது.

நமது வாழ்விலும் நாம் வாழும் நிலம், எமது ஆலயத்தலம், படிப்பகம், வாழும் வீடு, நமது பதவி எல்லாமே நமது பாவிப்பாலும் நமது நிலைபாலும், நமது நேர்மையான உழைப்பாலும் தூய்மை பெறட்டும். நாம் விட்டுச்செல்லும் எமது எந்த ஞாபகார்த்தமும் தூய்மை நிறைந்ததாக இருக்கட்டும்.

நிலை பதினான்கு (இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்)

ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா — என்ற கவிஞனின் வார்த்தைகள் எம் வாழ்வில் எவ்வளவு உண்மையானவை—

சரித்திரங்கள் படைக்கலாம், சாதனைகள் புரியலாம். ஆனால் ஈற்றில் எல்லாம் வெட்டியில் தான் அடக்கப்படவேண்டும்.

எமது அனைத்து அனுபவங்களையும் எம்மக்களின் துன்ப துயரங்களையும் இயேசுவைப் போல் தாங்கிக் கொள்வோம். எம் வாழ்வின் பாடுகளுக்கு உறுதியையும் உரத்தையும் இயேசுவின் பாடுகளில் இருந்து பெற்றுக் கொள்வோம்.

(முற்றும்)

நன்றிகெட்ட உலகமடா

ம. சிந்தாத்துரை

வாழுலகம் உன்னை மறந்ததடா — படு
பாதகர் செய்த செயல் கொடுமையடா
வாழ்வினை தீர்த்தங்கு நின்றாயடா — கர்த்தன்
உனையறியாமல் வதைத்தாரடா.

காட்டிக் கொடுத்தவனோ கழுமரத்தில் — நீயும்
கசையடி பட்டுநொந்தாய் அவை நடுவில்
சிந்திய செங்குருதி மேனியிலே — ஓட
சிரமதில் முடிமுள்ளால் பதித்தாரடா.

தூக்கிச் சுமக்கவைத்தான் பிலாத்தவனும் —
தாங்காத
தோளில் பெலமிழந்து, தரை விழுந்தும்
வஞ்சகர் ஈட்டியினால் விலாபிளந்தே — நீயும்
நெஞ்சுருகத் துன்பம் அனுபவித்தாய்.

[illegible] — உன்னை
குற்றப்பிராயிடையில் தொங்க விட்டே
ஆவிதுடித்திடப் பிதாவினை வேண்டி — இப்
பாவியர் வாழ்வுக்காய் உயிர் துறந்தாய்.



பொய்யாமொழி

குறள்:

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

பொருள்:

பொருள் கொடாத தன்மையும் மாட்சியில்லாத மானமும் தகுதியற்ற மகிழ்ச்சியும் தலைவனாக இருப்பவனுக்குக் குற்றங்களாகும்.

பத்திரிகை துறையின் சுதந்திரத்தை சட்டசபை பறிப்பது அபத்தம்!

ஆனந்த விகடன் தொடர்பான சட்டசபை விவாதத்தில் மனோகரன்

பத்திரிகை உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஆனந்த விகடன் விவகாரம் சம்பந்தமாக தமிழ்நாடு சட்டசபையில் நிகழ்ந்த விவாதத்தின் தொகுப்பு இங்கு தரப்படுகிறது

சபாநாயகர் பாண்டியன்:-

எனது சட்டசபை ஏற்பதற்கு மாறாக, ஆனந்த விகடன் சஞ்சிகை நகைச்சுவையுடன் சில காரணங்களை வாசகர்களுக்கு விளக்கி உள்ளது.

அதன் ஆசிரியர் இக்கட்டுரையை இணைத்து கடிதம் ஒன்றை சபைச் செயலாளருக்கு அனுப்பி உள்ளார்.

இக்கட்டுரையில் இவர் கொடுத்துள்ள விளக்கம் மன்னிப்பாகாது. ஆனால் இவ்விளக்கம் அதற்கு மாறாக இச்சபையின் கௌரவத்துக்கும், அதன் அங்கத்தவர்களின் மாண்புக்கும் மேலதிக களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இச்சஞ்சிகை தொடர்ச்சியாக நீண்ட காலமாக சபைக்கும் களங்கம் ஏற்படுத்தும் ஆக்கங்களை வெளியிட்டு வந்துள்ளது என்பது நாமறிந்த உண்மை.

ஆனந்தவிகடன் ஆசிரியர் சபையை அவமதித்து உள்ளார் என்று கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை.

இன்று பல பத்திரிகைகள் மக்களை முற்றாகத் தவறான வழிகளில் இட்டுச் செல்கின்றன. பொய்யுரைகள், புனையுரைகளை பணம் உழைக்கும் நோக்குடன் இவை வெளியிடுகின்றன.

பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் வரையறைகள் தேவை. லண்டனில் ஹைட்பார்க்கில் ஒருவன் கையில் ஊன்றுகோலுடன் நடந்து செல்கிறான் தனது கைக்கோலை நாலாபக்கமும் சுழற்றுகிறான். அருகில் செல்பவரின் மூக்கில் அதுபட அவன் கோபிக்கிறான்.

தனது செயலைச் சுதந்திரம் என்று விளக்கமும் அளிக்கிறான் இச்சுதந்திரம் ஒருவேலிக்குத்து அல்லவா? சபை இதுதொடர்பாக முடிவு எடுக்க வேண்டும்

சபை முதல்வர் வி. ஆர் நெடுஞ்செழியன்:- இவ்விடயம் விவாதத்துக்கு எடுக்கப்படுகிறது.

திருமதி யசோதா (இந்திரா காங்கிரஸ் தலைவி) ஜனநாயகத்தின் பெயரால் எதையும் பிரசுரிக்கலாம் என்பது பத்திரிகைகளின் நிலைப்பு. ஓர் அரசியல்வாதியின் தவறுக்காக பொது வாழ்க்கையில் உள்ள அனைவரையும் தாக்கலாமா?

கேலிச் சித்திரம் மூலம் சபை உறுப்பினர்களைக் கேவலப் படுத்தியதுடன். மன்னிப்புக்கூறத் தவறியுள்ளது. எனவே ஆசிரியருக்கு மிகக் குறைவான தண்டனையாவது வழங்கப்படவேண்டும்.

திரு. க. மனோகரன் —(தலைவர் தி. க குழு)

சபாநாயகர் ஏற்கனவே மார்ச் 28இல் தண்டனை வழங்கிய பின்னர் விவாதிக்க என்ன இருக்கிறது

நிறைவேற்றுக் குழு, சட்டசபை, நீதித்துறை, பத்திரிகைத்துறை ஆகியன ஜனநாயகத்தின் தூண்களாகும். பேனா வாளிலும் பார்க்க கூரியது.

ஆனந்தவிகடன் ஆசிரியர்தான் யாரையும் புண்படுத்தும் நோக்குடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சமய சந்திகளில்

துர்க்காதேவி தேவஸ்தானத்தில்

சுன்னாகம், ஏப் 11

பிரபவ வருடப்பிறப்பு விழா ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மிக சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது

அதிகாலை 5 45க்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகும் விழாவில் 8 00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் முற்பகல் 11.00 மணிக்கு உச்சிக்கால பூசையும் இரவு 7 30 மணிக்கு அர்த்தசாமப் பூசையும் இடம்பெறும். (தி-27)

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months - Weekends
Commencement 25-4-1987
Fees: Rs 1500/-
JOIN THE LEADERS
Cantabia Institute
11, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

உதயன்

12. 04. 1987 ஞாயிற்றுக்கிழமை

"TOEFL"
Weekend Classes
Duration -- 3 Months
Full Fees 250/- only
Commencement; 11-04-1987
Lectures by Popular English Lecturer
Mr. Kandiah Navarndran
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

இலங்கை - இந்திய உறவை விரிசலாக்க அமெரிக்கா முயற்சி

ரஷ்ய தினசரி "இஸ்வெஸ்தியா" கூறுகிறது

கொழும்பு. ஏப். 12 இனப் பிரச்சினையை வைத்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவுகளை விரிசல் அடையச் செய்வது தான் அமெரிக்காவின் நோக்கம்.

இப்படி ரஷ்ய அரசு தினசரியான 'இஸ்வெஸ்தியா' வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

'இலங்கையின் நீண்ட நெருக்கடி' என்ற தலைப்பில இக்கட்டுரை இம்மாதம் 7ஆம் திகதி இதழில் வெளியாகியுள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அயல்நாடு என்ற முறையில் இந்தியா உதவுகின்றது.

மேற்குலகின் சில வட்டாரங்கள் இனப் பிரச்சினையை வைத்து அனுகூலம் அடையும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளன

இனப்பிரச்சினை இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கின்றது.

அதே நேரம் நாட்டை ஏகாதிபத்தியவாதிகளின் கபட தந்திரங்களுக்கும் பலியாக்குகின்றது.

இந்த அபாயங்களைக் கருத்தில் கொண்டு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும்.

இரண்டு இனங்களுக்கும் ஏற்புடையதான அரசியல் தீர்வும் காணப்படவேண்டும்

இதற்கு இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள சகல முற்போக்குச் சக்திகளும் உழைக்க வேண்டும்.

ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து விட்டனர். மிகத் துன்பகரமான விளைவு இதுதான்.

இலங்கையின் இராணுவச்செலவினம் 1,500 கோடி ரூபாவாகிவிட்டது. ஆயுதப்படையினர் 5 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதப் போராட்டம் தேசிய பொருளாதாரத்தையே மிக மோசமாகப் பாதித்துவிட்டது-

இப்படி இஸ்வெஸ்தியாவில் திரு. வி. கொன்ட்ராஷோவ் என்ற ரஷ்ய அரசியல் விமர்சகர் எழுதியிருக்கின்றார். (இ-எ)

வித்தாரம்

என்ன முரளியார்! இன்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. காலையிலை எங்கே புறப்பட்டு விட்டீர்?

ஓ, அரசாங்கம் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் செய்து போட்டுது பத்து நாளைக்குக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கலாம் என்டு நினைக்கிறவை தான் அதிகமாயிருக்கு. அப்படி நினைக்கிறவை ஏமாறவேண்டியது தான்.

அரசாங்கம் உண்மையான யுத்த நிறுத்தமே செய்திருக்கு? உது வெறும் பம்மாத்தப்பா! நேற்றைக்கும் அடிக்கடி கோட்டைப் பக்கமாயிருந்து 'குச்சு குச்சு' வெடிச்சத்தம் கேட்டுது. பின்னேரம் 5.45 மணி போலையும் ஒரு பெரிய சத்தம் கேட்டுது தானே.

ஆனால் எங்கடை சனத்துக்கு ஏதோ பிரச்சினையே தீர்ந்து விட்டுது, இனிமேல் எதுவுமே நடவாது என்டதுபோலை நேற்று இரவு ஏழு மணி வரைக்கும் ஸ்ரான்லி வீதியிலை சனம் நிரம்பி வழிஞ்சது பார்க்கயில்லையே. பின்னேரம் நாலரை மணிக்கு றோட்டாலை போகயிக்கை இது யாழ்ப்பாணமோ, கொழும்போ என்டு ஒரு ஐமிச்சம் வந்திட்டுது. ஒரேயொரு வித்தியாசம் சைக்கிளுகள் கொழும்பைவிட இஞ்சை கொஞ்சம் கூட இருந்திது. எரிபொருள் தடை என்டு சொல்லுறது தான் கார் என்ன, மோட்டார் சைக்கிள் என்ன, ஸ்கூட்டர் என்ன எல்லாமே றோட்டுக்களை அடைச்சுக் கொண்டு போயின அது மட்டுமே? ஆஸ்பத்திரிச் ஷெல் அடிக்குப் பிறகு பின்னேரம் நாலு மணிக்கே வெறிச்சோடிப்போய் விடுற பஸ் நிலையத்திலை நேற்றைக்கு ஏழு மணிக்குப் பிறகும் சனநடமாட்டத்தைக் காணக்கூடியதாயிருந்திது.

அதைப் பார்த்த ஒரு நண்பர் — கோட்டையிலிருந்து ஷெல் அடிக்கவும் வேணும் தான் பேசாமல் இருக்கு சத்தம் இல்லையென்டால் யாழ்ப்பாண நகர மக்களுக்கென்ன, வெளியூர் சனத்துக்கென்ன இது போராட்ட காலம் என்ட நினைப்பே இல்லாமல் போய்விடும் போலை இருக்கு—என்டு சிரிச்சுக் கொண்டே சொன்னார்

இன்டைக்கு ஞாயிற்றுக்கிழமை தான் என்டாலும் நாளை இன்டைக்கு வருஷப் பிறப்பு அதாலை சனம் இன்டைக்கும் கட்டாயம் "ஷொப்பிங்" செய்யுங்கள் என்டதில் ஐமிச்சமே இல்லை. கடைக்காரரும் பாவங்கள் தானே கன நாளாய் பிஸ்னெஸ் இல்லாமல் கஷ்டப்பட்டவை. புது வருஷ வியாபாரமாவது நடந்தால் தானே ஒரு மாதிரி ஈடு செய்யலாம் ... ஏதோ நடக்கிறது நடக்கும்!

* * *

யுத்த நிறுத்தக்காரர் "நிறுத்தம்" எழுதுக்கு வந்த ஒரு மணி நேரத்திலையே முகாமுக்கு வெளியே வெளிக்கிட்டு குரும்பசிட்டியிலை பெரிய அமர்க்களம் நடத்திச்சினமாம் நான் முன்னுக்கே சொல்லயில்லையே! உது கலகத்தை ஏமாத்திற வேலை என்டு!

தொண்டமான் குடுத்த 'ஐடியாவிலை' தான் உதைச் செய்ததா எல்லாரும் நினைக்கினம். உது ஏற்பாடு செய்யப்பட்ட நாடகம். அவர் சொல்லியதை செய்ததாய் இருக்கட்டும் என்டு மாத்திரம். அவ்வளவு தான். உதால எதுவிதமான பிரயோசனமும் வரப் போறயில்லை

எரிபொருள் விஷயத்திலையும் இன்னும் கிடந்து இழுபடுகினம். இப்ப மண்ணெண்ணெயை கச்சேரிக்கு மாத்தி டீசல், பெற்றோலை முகாமிலை தான் வைச்சிருக்கினம். யுத்த நிறுத்தம் என்டதாலை சில ரோஷங் கெட்டதுகள் பெர்மிட்டுக்குத் தங்களிட்டை வருங்கள் என்டு எதிர்பார்க்கினமோ என்னவோ...!



யாழ் ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல்

வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு லலித்துடன் சந்திப்பு

யாழ் கிளைத் தலைவரும் இருந்தார்

கொழும்பு, ஏப் 12 யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிமீது ஷெல் தாக்குதல் இடம் பெற்றது குறித்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு ஒன்று கடந்த வியாழ கிழமை அமைச்சர் லலித்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது

பிரஸ்தாப தூதுக்குழுவில் சங்க யாழ் கிளைத் தலைவர் டாக்டர் எஸ். சிவகுமாரனும் இடம் பெற்றிருந்தார்.

தாய்ச் சங்கத் தலைவர் டாக்டர் ஸ்டான்மோர் டி அல்விஸ், செயலாளர் டாக்டர் கனில் இரத்தினப்பிரியா ஆகியோரும் இத்தூதுக் குழுவில் இடம் பெற்றனர்.

சங்கத்தின் செயலாளர் டாக்டர் கனில் இரத்தினப்பிரியா பின்னர் தகவல் தருகையில் சொன்னதாவது:

கடந்த 30ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவம்பற்றி இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமல் பார்த்துக்கொள்ள தன்னாலியன்ற நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்

ஆஸ்பத்திரி நிர்வாகம், பாதுகாப்பு ஆகியன குறித்தும் இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டன.

இப்படி டாக்டர் இரத்தினப்பிரியா தெரிவித்தார்.

இத்தூதுக் குழு பின்னர் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவைச் சந்தித்துப் பேசியது. (இ-எ)

வயாவிளான் வாசிகள் அச்சுவேலி தபாற்கந்தோரில் உதவிப் பணத்தைப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப். 12 இதுவரை வயாவிளான் தபாற்கந்தோர் மூலமாக அரச பராமரிப்புப் பணம் பெற்று வந்தவர்கள் தொடர்ந்து தமது உதவிப் பணத்தை அச்சுவேலி தபாலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏப்பிரல் மாதத்துக்கான உதவிப் பணக் கொடுப்பனவுகளை அச்சுவேலி தபாற்கந்தோர் மூலமாகக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வயாவிளான் பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ் ஜி என். நாதன் தெரிவித்தார். (இ-வ)

மயிலிட்டி தெற்கு பிரசைகள்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 12 மயிலிட்டி தெற்கு பிரசைகள்குழுக்கூட்டம் மல்லாகம் இந்துக்கல்லூரியில் நாளை திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறும்.

மயிலிட்டி தெற்கு, குரும்பசிட்டிப் பகுதிகளில் இராணுவ முற்றுகையால் உடைமைகளை இழந்துள்ள மக்களுக்கு நிவாரண வசதிகள் பெறுவது பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

நிவாரணப் பட்டியல்களைத் தயாரிப்பதற்கு உதவுமுகமாக குரும்பசிட்டி மயிலிட்டி தெற்கு மக்கள் அனைவரையும் சமுகமளிக்கும்படி பிரசைகள்குழுச் செயலாளர் திரு போ சிவசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (இ-ஓ)

பதவி உயர்வும் இடமாற்றமும்

மானிப்பாய், ஏப் 12 யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. கதிரவேலு கமலேசுரம், முகாமையாளராக பதவி உயர்வு பெற்று பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கு இடமாற்றம் பெற்றார்

தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை முகாமையாளர் திரு. எஸ் கணேசன் நீர்கொழும்புக்கும், பம்பலப்பிட்டிக் கிளை முகாமையாளர் திரு. என். சிவபாலகணேசன் யாழ்ப்பாணத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (இ-90)

அஞ்சலிக் கூட்டம்

வேலணை, ஏப்ரல் 12 ஈழ மண்ணுக்காக உயிர் துறந்த பண்டிதர், அருண், ராம்மோகன், சிம்மன் ஆகிய வீரவேங்கைகளுக்கான கண்ணீர் அஞ்சலிக் கூட்டம் வேலணை வங்களாவடிச் சந்தியில் திரு ச. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது (இ-167)

அன்பளிப்பு

நெடுங்கேணி. ஏப். 12 தண்டுவான் இராமோதய சபையின் கீழுள்ள ஐந்து பாடசாலைகளிற் கற்கும் வறிய மாணவ, மாணவிகளுக்கு தேவையான கொப்பி, பென்சில்களை தண்டுவான் இராமோதய சபை தலைவர் திரு. வே. செல்லத்தம்பி அதிபர்களிடம் அன்பளிப்பு செய்தார். (இ-108)

சிங்களக் குடியானவர்களிடம்

துப்பாக்கிகளைப் பறித்தவர்கள் யார்?

கொழும்பு. ஏப் 12 நொச்சியாகம என்னும் கிராமத்தில் வசிக்கும் சிங்களக் குடியானவர் இடம் இருந்த துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் அபகரித்துச் சென்ற இனந்தெரியாத நபர்கள் யார்?

இதுபற்றி அனுராதபுரம் பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

கடந்த வியாழன் இரவு நடைபெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது!

இராணுவ உடை தரித்த ஆறுபேர் கிராமத்துக்குச் சென்று, பாதுகாப்புப் படையினர் வழங்கிய ஆயுதங்களைத் துஷ்பிரயோகம் செய்வது குறித்து விசாரணைசெய்யப்போவதாக கூறினராம்.

அதன் பின்னர் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் கிராமவாசிகளிடம் இருந்து வாங்கி எடுத்துக்கொண்ட அக்கோஷ்டியினர், மறுநாள் நொச்சியாகம பொலீஸ் நிலையத்துக்கு வரும்படி கூறிவிட்டுச் சென்றனராம். அதற்கு இணங்க கிராம வாசிகள் நொச்சியாகம பொலீஸ் நிலையத்துக்குச் சென்றனர்.

அப்போதுதான் உண்மை தெரியவந்தது இது தீவிரவாதிகள் செயலாக இருக்காது என்று கூறிய பொலீஸார், அப்பகுதியைச் சேர்ந்த சிங்களத் தீவிரவாத இளைஞர்கள் செயலாக இருக்கலாம் என்று நம்புகின்றனர். (இ-எ)

கடாபியின் முக்கியமான செய்தி

திரிபோலி, ஏப்ரல் 11 லிபியா ஜனாதிபதி கடாபி சோவியத் அதிபர் கோர்பச்சேவிற்கு ரகசியமானதும் முக்கியமானதுமான ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்

இந்தச் செய்தியின் விபரங்கள் எதையும் வெளியிடப்படவில்லை.

தற்பொழுது லிபியாவிற்கு அமெரிக்காவிடமிருந்தும் பிரான்சிடமிருந்தும் சாட் நெருக்கடி தொடர்பாக தோன்றியுள்ள பிரச்சினையில் சோவியத்தின் முக்கிய பங்கு பற்றி இச்செய்தி அமையலாம் என நம்பப்படுகின்றது (ஒ)

சித்தி அடைந்த ஒரே தமிழர்

யாழ்ப்பாணம் ஏப். 12 கடந்த வருட தொழில் நுட்ப உத்தியோகத்தர் தரம் II 'அ' பிரிவுக்கான பரீட்சையில் திரு. கதிரவேலு சந்திரபோஸ் சித்தி அடைந்தார்.

இப்பரீட்சையில் சித்தி பெற்ற ஒரே தமிழர் இவர் ஆவார்.

யாழ் மாநகரசபையில் கடமை பார்த்த இவர் தற்போது பா. அ சபை உருப்பராய் - ஊரெழு கூப அலுவலகத்தில் மின் அத்தியட்சகராகவும் தொழில் நுட்பக் கல்லூரியில் பகுதிநேர போதனாசிரியராகவும் கடமை புரிகின்றார். (இ-எ)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
செல்லம்மா
அருணாசலம்
தோற்றம்:
24-11-1902
மறைவு:
23-04-1986

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
திதி: 12-04-1987

"வசந்தம்"
புதுவீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மகள், மருமகன்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்
(1195)

இலங்கைப் பிரச்சினையில் சந்திரா சுவாமி அக்கறை

புதுடில்லி, ஏப் 12 இலங்கைப் பிரச்சினை குறித்து சந்திரா சுவாமி அக்கறை காட்டுகின்றார்

இப்படி 'இந்தியா ருடே' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளில் 6 மாதகாலத்தைக் கழித்துவிட்டு இந்தியாவுக்கு கடந்த மாதம் சந்திரா சுவாமி திரும்பினார்.

அதைத் தொடர்ந்தே இத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா திரும்புமுன்னர் கடைசியாக சந்திரா சுவாமி இலங்கைக்கு விஜயம் செய்தார்.

கடந்த பெப்ரவரியில் கொழும்பில் அரச விருந்தினராக சந்திரா சுவாமி தங்கியிருந்தார்

இனப்பிரச்சினைக்கு எப்படி தீர்வுகாணலாம் என்ற கருத்துக்களை சந்திரா சுவாமி இலங்கை அமைச்சர்களிடம் அப்போது கேட்டறிந்து கொண்டார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் சந்தித்து அவரின் அபிப்பிராயங்களையும் சந்திரா சுவாமி அறிந்து கொண்டார்.

தமிழ்நாடு திரும்பிய பின்னர் தமிழ்ப் போராளித் தலைவர்கள், அ.தி.மு.க. அமைச்சர்கள் ஆகியோரையும் சந்திரா சுவாமி சந்தித்துப் பேசினார்.

இப்படி 'இந்தியா ருடே' சஞ்சிகையின் பிரபு சவ்லா எழுதியிருக்கிறார்.

சந்திரா சுவாமியின் பிரபல சீடர்களில் ஒருவர் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டும் அல்ல, உலகின் பிரபல ஆயுத விற்பனையாளர்களான சவூதி அரேபியா கோடீஸ்வரர் அட்னன் கஷோகி, புருணி சுல்தான் ஆகியோருடனும் சந்திரா சுவாமி நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கிறார். (இ-எ)

விசாரணை - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

"யார் செய்தது சரி, யார் செய்தது பிழை என்பதை கண்டுபிடிப்பது தல்ல ஆணைக்குழுவின் நோக்கம்; இப்படியான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தவிர்க்கும் வழிவகைகளைக் காணுவதே ஆணைக்குழுவின் நோக்கம்"— இப்படி அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்திருக்கிறார்.

எரிபொருள் - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கூறியிருக்கிறார்.

இது அமைச்சரவையின் முடிவுக்கு மாறானதாக உள்ளது.

இப்படி கூட்டணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

பத்திரிகை...,

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கேலிச் சித்திரத்தை வெளியிடவில்லை என்று விளக்கம் அளித்தபின்னர் இந்த நடவடிக்கை நியாயமாகாது.

ஆங்கிலத்தில் வெளியாகும் Punch பத்திரிகையின் கேலிச் சித்திரங்களை யாரும் பெரிதுபடுத்துவதில்லை.

இந்தியாவில் அதற்கு ஈடாக வெளியாகும் துக்ளக் பத்திரிகையும் அப்படியே என்னைப் பற்றி இப்பத்திரிகை ஆசிரியர் எழுதியுள்ள போதிலும் அதனை நான் நல்லுணர்வுடன் ஏற்றுக் கொண்டு உள்ளேன்.

"இயஸ் மினிஸ்டர்" என்ற தலைப்பில் பி. பி. சியில் தொடர்ச்சியாக வெளிவந்த சித்திரம் பிரித்தானிய அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கேலி செய்தன. அவை மிகவும் பிரபல்யமானவை. அவற்றைப் பிரித்தானிய நாடாளுமன்றம் தடைசெய்யவில்லை

[illegible] வெளியிட்டன. அதனைத் தடைசெய்ய இந்திரா அம்மை மறுத்து விட்டார்.

அச்சித்திரத்தை தான் ரசிப்பதாக இந்திரா கூறினார்.

அமெரிக்க நகைச்சுவையாளர் ஆர்ட் பச்வால்ட் வெளியிடும் கட்டுரைகள் 'இந்து' பத்திரிகையில் வெளிவருகின்றன. இக்கட்டுரைத் தொடர் அமெரிக்க ஜனாதிபதி றேகனைத் தாக்குவதாக இருப்பினும் அமெரிக்க மக்கள் இதனை வரவேற்கின்றனர்.

எஸ் எஸ். வாசனால் ஆரம்பிக்கப்பட்ட ஆனந்த விகடன் நல்ல பத்திரிகை தருமத்தை நிலைநாட்டி வருகிறது.

சபை வழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கைகளில் சடுபடக்கூடாது சபாநாயகர் விகடன் ஆசிரியரை அழைத்துச் சபையின் உணர்வுகளை விளக்கலாம். அண்ணா தி மு. க. பத்திரிகைத் துறையுடன் மரண்டக்கூடாது.

பத்திரிகைச் சுதந்திரம் [illegible] வேண்டும்.

(தொடரும்)

(இ-9)

சர்வதேச . . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

சைத் தாக்கிய செயல் உலகில் எங்கும் நடந்தது கிடையாது.

இப்படியான அநாகரிகமான செயல்களால் இலங்கை உலகின் முன் தலைகுனிந்து நிற்க வேண்டியுள்ளது

புத்த தர்மத்தைப் போற்றுகின்ற இலங்கையில் இப்படியான மிருகத்தனமான செயலும் நடக்கின்றதா என வினவுகின்றனர்.

இப்படியான சூழ்நிலையில் தனிநபர் ஆணைக்குழு நியமிப்பதில் எவ்வித நன்மையும் ஏற்படாது

ஆகவே சர்வதேச நீதி விசாரணைக்குழு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி கட்டுறவுச் சபைத் தலைவர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

விற்பனை

மானிப்பாய்க்கும் சண்டிலிப்பாய்க்குமிடையில், நல்ல சுற்றுடலில் 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்.
என். ஜெயரஞ்சிதன்
ஷப்ரு யுனிக்கோ பிளுன்ஸ் லிமிட்டட்,
யாழ்ப்பாணம்.
(8827)

யாழ். ஆஸ்பத்திரி
இரத்த வங்கி
உங்கள் சேவையை
எதிர்பார்த்து நிற்கிறது!
இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!
தானத்தில் சிறந்தது இரத்ததானம்

உயிர் காக்கும்
சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது
உன்னத பணி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 12-04-1987 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd
15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Under Number
QJ / 94 / N /87 Telephone, 24805, 22073